[25th October 1971

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) இது போன்ற கோரிக்கை ஏதும் அரசுக்கு அனுப்பப்படவில்லை. ஆனால் நீலகிரி மாவட்ட (உதகமண்டலம்) தமிழ்நாடு, வேளாண்மைத் துறை அமைச்சுப் பணியாளர்கள் சங்கத்திலிருந்து "திட்டப்படி" (Project allowance) அளிக்கும்படி கேட்டு ஒரு கோரிக்கை வந்துள்ளதாகவும் அக்கோரிக்கை தன் பரிசீலனையிலிருப்பதாகவும், வேளாண்மை இயக்குநர் கூறியிருக்கிறார்.

Soil Testing Laboratory at Ooty.

* 16 @ Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there is any proposal to open Soil Testing Laboratory at Ootacamund by the Indo-German Development Project; and

(b) if so, the details thereof?

உதகை மண்வளப் பரிசோதனை ஆய்வுக்கூடம்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. வி. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உதக மண்டலத்தில் இந்தோ-ஜெர்மானிய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மண்வளப் பரிசோதனை ஆய்வுக் கூடம் ஒன்றைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஏற்கனவே உதகையில் இந்திய ஜெர்மானிய உதகை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு மண் பரிசோதனை நிலையம் இயங்கி வருகிறது. மற்றுமொரு நிலையம் ஆரம்பிப்பது பற்றி மேற்படி திட்ட அதிகாரிகளிடமிருந்து செயற்குறிப்பு எதுவும் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

State Seed Farms.

* 17 @ Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether it is a fact that a number of State Seed Farms are working at a loss;

(b) if so, the names of such seed farms; and

(c) the loss so far incurred by each one of them?

@ Postponed from the list of Questions for 22nd October 1971.